*Intervention 2008, Volume 6, Number 2, Page 188 - 191*

# Summaries in Tamil

### ஒரு சாத்தியமான வளம்? ஜம்மு மற்றும் கஷ்மீரிலுள்ள முன்னைய-இராணுவதாரிகள்

இந்தப்பிரசுரம் இந்தியாவின் ஜம்மு மற்றும் கஷ்மீரிலுள்ள முன்னைய-இராணுவதாரிகள் பற்றிய ஒரு தரம் சார் கற்கையின் முடிவுகளைப் பகிர்கிறது. இராணுவத்துடன் தொடர்புபட்ட ஆண்கள் தமது அனுபவம், கருத்துகள் தொடர்பாக நேர்காணப்பட்டனர். தகவல்களை பகுப்பாய்வு செய்தபோது, வாழ்க்கையின் அனுபவங்களால் செயலூக்கவாதத் தன்மை உருவாகியிருப்பது தெரியவந்தது. இதனால் இவர்களிடம் சமூக அபிவிருத்திக்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குமான பிரயோகனமான வளங்களான குணாதிசியங்களும் கருத்துக்களும் இருப்பது தெரியவந்தது.

**முக்கிய சொற்கள்:** முன்னைய இராணுவதாரிகள், பலங்கள், அழுத்தங்கள், செயலூக்கம், பிறர் நலக் கொள்கை.

---

### சிறுவர்களின் தேவைகளா? சிறுவர் உரிமைகளா? உளசமூக திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒரு சட்டவரைபாக சிறுவர் உரிமை சாசனம்

சிக்கல் மிகுந்த அவசரகால நிலைமைகளை குணஇயல்புப் படுத்தும் சம்பவங்கள்: ஆயுத முரண்பாட்டு நிலைமைகள், கட்டாய புலம்பெயர்வு மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என்பன பாரிய சிறுவர் உரிமை மீறல்களை ஏற்படுத்தலாம். இவ்வாறான நிலைமைகளில் நடைமுறைப்படுத்தப்படும் உளசமூக திட்டங்கள் பொதுவாக ‘தேவை’ கண்ணோட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சிறுவர்களின் மனித உரிமைகள், எண்ணக்கரு சட்டவரைபில் உள்ளிணைக்கப்படுவதில்லை. இந்தப் பிரசுரம் சிறுவர் உரிமை சாசனத்தின் சட்ட மற்றும் ஒழுக்கரீதியான கடமைப்பாடுகள்பற்றி விபரிக்கின்றது. அத்தோடு மனிதஉரிமை அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் மதிப்பீடு செய்தல் செயல்முறை பற்றியும் குறிப்பிடுகின்றது. உளசமூக இடையீடுகளின் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மற்றும் மதிப்பீடு செய்தல் என்பன CRCயின் வழிகாட்டல் கொள்கைகளுக்கமைய அமைந்திருக்குமேயானால் மேலும் சிறப்பாக சிறுவர் தேவைகளையும் உரிமைகளையும் அடையக்கூடியதாக இருக்குமென ஆலோசனை வழங்குகின்றது.

**முக்கிய சொற்கள்:** சிறுவர் உரிமை, மதிப்பீடு.

---

### சமூக மட்ட சமூகக் சிகிச்சை (sociotherapy) பியும்பா, றுவாண்டா

றுவாண்டாவில் சமூக மட்ட சமூக சிகிச்சை திட்டம் ஒன்று 2005ம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது. இக் கட்டுரையானது, சமூக சிகிச்சையின் பின்னணி, அதன் கொள்கைகள், நெதர்லாந்தில் அகதிகளுடன் இதன் பிரயோகத்தின் அனுபவம் என்பவற்றை விபரிப்பதோடு சில குறிப்பிட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, இனப் படுகொலைக்குட்பட்ட றுவாண்டாவில் இதன் அறிமுகத்திற்கான உறதிப்படுத்தலையும் வழங்குகிறது. மேலும், இந் நிலைமைகளில் இத்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

திட்டத்தின் வளர்ச்சி, இலகுபடுத்துனர் தேர்விற்கான நிபந்தனைகள், திட்ட உத்தியோகத்தர் மற்றும் இலகுபடுத்துனருக்கு இருக்க வேண்டிய பண்புகள், பயிற்சி முறைமை, திட்ட அமுலாக்கல், களத்தில் பிரயோகிக்கப்பட்ட சமூக சிகிச்சை முறைகளும் உதாரணங்களும், பல்வேறு குழுவினர் இத்திட்டத்தை வரவேற்ற முறைகள், திட்டம் விரிவுபடுத்தப்பட்டமை என்பன பற்றியும் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறதியாக, இத்திட்டம் எதிர்கொண்ட சவால்களைக் கலந்துரையாடுகிறது.

**முக்கிய சொற்கள்:** றுவாண்டா, சமூக சிகிச்சை, பயிற்சி, சமூக முதலீடு.

---

**வெளிநாட்டு தொழில் வாண்மையாளர்களால் சமூக உணர்வு கொண்ட மேற்பார்வை: அடிப்படை விடையங்கள்**

மேலைத் தேச தொழில் வாண்மையாளர்கள் உள்நாட்டு உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்தல் என்பது குறைந்த வருமானம் உள்ள, அவசரகாலத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமுல்படுத்தப்படும் மனநலத் திட்டங்களில் பொதுவானதாகும். இம் மேற்பார்வையாளர்களின் தொழில் பெரும்பாலும் பல காலாச்சாரங்களுக்கு இடைப்பட்டதாகும்: பல காலாச்சார மக்கள் இதில் பங்குகொள்வர். இப் பல் காலாச்சார முறைமைகளைக் கண்காணிப்பது மேற்பார்வையாளரின் கடமையாகும். மேற்பார்வை செய்யப்படும் குழுவிற்கிடையிலான வித்தியாசங்களையும் மேற்பார்வையாளருக்கும் மேற்பார்வை செய்யப்படுபவருக்கும் இடையிலான வித்தியாசங்களையும் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் தனது கலாச்சாரம் அடங்கலாக, எந்தவொரு கலாச்சாரத்தின் விழுமியங்கள் தொடர்பாகவும் வினாவெழுப்பக்கூடியவாரகவும் இருக்க வேண்டும்.

**முக்கிய சொற்கள்:** மருத்துவ மேற்பார்வை, காலாசார வித்தியாசங்கள், பல காலாச்சாரங்களுக்கிடைப்பட்ட, பல்கலாச்சார, வெளிநாட்டவர்கள், காலாச்சார வாண்மை.

---

**உளசமூக சேவை மற்றும் ஆற்றுப்படுத்தல் பற்றிய செயன்முறை அறிவு மற்றும் இவை தொடர்பான அறிவை விருத்திசெய்தல்**

பல யுத்த முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மனநலன், உளசமூக இடையீடுகளின் அறிவு மற்றும் செயன்முறை அறிவு என்பவற்றிற்கான அவசர தேவை இருக்கின்றது. மேற்கத்திய பல்கலைகளகங்களில் அல்லது மேற்கத்திய தேசங்களில் விருத்திசெய்யப்பட்ட அறிவை வேறு பிரதேசங்களில் பிரயோகப்படுத்துவது பொருத்தமாக இருக்காது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடொன்றிற்குப் பொருத்தமான அறிவு மற்றும் செயன்முறைகளை விருத்திசெய்வதற்கான விடையங்கள் இக் கட்டுரையில் வழங்கப்படுகிறது. இம் முறையானது மேற்கத்திய நாடுகளிற்கு குடிபெயர்ந்த மக்களுடனும் அகதிகளுடனும் தொழில் புரியும்போதும் உதவியளிக்கும்.

**முக்கிய சொற்கள்:** உளசமூக ஆற்றுப்படுத்தல், இயலுமை, குடிவரவாளர்கள், அறிவு, செயன்முறை அறிவு, மனநலன், உளசமூக இடையீடுகள், அகதிகள்.



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**தென்மேற்கு உகண்டாவின் கிராமப்புறங்களில் புதுமையான சமூகத்தை அடையும்வகையிலான மனநல செயற்பாடுகள்**

உப சகாராவைச் சார்ந்த உகண்டாவில் மன நோய் என்பது பொதுவான மனநலப் பிரச்சினையாகும். இதற்கான காரணங்கள் வறுமை, உயர்வான ர்ஐஏ எயிட்ஸ் வீதம், நீண்ட கால சிவில் யுத்தம் மற்றும் ஆயுத முரண்பாடு என்பனவாக இருக்கலாம். பல மன நல உத்தியோகத்தர்கள் நகரப் பகுதிகளிலேயே தொழிற்பட விரும்புகின்றனர். நகர்புற மனநல வைத்தியசாலைகளின் விலைவாசி கிரமப்புற மக்களுக்குப் பெரும் தடையாக இருப்பதுடன் இவர்களை பாரம்பரிய வைத்தியர்களை நாடத்தூண்டுகிறது. தென்மேற்கு உகண்டாவின் கிராமப்புறங்களில் சமூகத்தை அடையும் வகையில் மன நோயாளிகளுக்கும் உளசமூகப்பிரச்சினை உள்ளவர்களுக்கும் ஓர் மனநல பராமரிப்பை வழங்கவதற்கான திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது, பெரும்பான்மையான மக்கள் வாழும் பிரதேசங்களுக்கும் சேவைகள் இல்லாத பிரதேசங்களுக்கும் மனநல பராமரிப்பு சேவையை எடுத்துச்செல்வதாகும். பயிற்சி தொடர்பான தேவைகள் பற்றி அடிப்படைத் தகவல்கள் உள்நாட்டு சுகாதார உத்தியோகத்தர்களை நேர்காணுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. மனநல சேவை தொடர்பான தேவைகள் சமூகத் தலைவர்களை நேர்காணுவதன் மூலம் பெறப்பட்டது. உள்நாட்டு சுகாதார நிலையங்களின் குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டன. ஒதுக்கப்பட்ட மனநோயாளிகள் சிகிச்சைக்குப் பின் சமூகத்துடன் ஒன்ற ிணைக்கப்பட்டுள்ளார்கள். 90 சுகாதார உத்தியோகத்தர்கள் பயிற்றப்பட்டனர். மனநல சேவையைப் பெறும் மக்களின் எண்ணிக்கையில் வளர்ச்சி இருந்தது. மனநல சேவையையும் அறிவையும் சமூகத்தில் வளர்பதால் மனநல பிரச்சினைகளும் உளவியல் பிரச்சினைகளும் வைத்தியசாலைகளுக்கான குறைவான பரிந்துரைகளுடன் சிறப்பாகக் கையாள முடியும்.

**முக்கிய சொற்கள்:** உகண்டா, அடிப்படை மனநல சேவைகள்.

---

**ஆபிரிக்காவின் பெரும் ஏரிப்பகுதியில் யுத்த மனவடுவிலிருந்து மீள்வதிலுள்ள சவால்கள். கொலம்பே வலையமைப்புத்திட்டத்தின் உபுன்ரு நிலையத்திலிருந்து ஒரு அனுபவம்.**

ஆபிரிக்காவின் ‘மனிதநேயம் மற்றும் சமூக இணைத்தொடர்பும்’ என்ற விழுமியத்தையும் உபுன்ருவின் விழுமியத்தையும் அடிப்படையாகக்கொண்டு கிராமிய சமூகங்களுக்கு உதவும் ஒரு திட்டம்பற்றி இந்த கள அறிக்கை விபரிக்கின்றது. இந்தத்திட்டம் சமாதானம் மற்றும் மீள்இணக்கப்பாட்டை ஊக்குதல் மற்றும் வன்முறையால் மனவடுவிற்குள்ளானோருக்கு உதவுதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. பணியாளர்கள் உள்ளூர் உளசமூக இலகுபடுத்தாளர்களுடன் பல்வேறுபட்ட பயிற்சிகள் மற்றும் பணிகளில் இணைந்து செயல்படுவார்கள். ஆரம்ப விளைவுகள் இலக்குக் குழுக்களில் நேரான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை காட்டுகின்றன.

**முக்கிய சொற்கள்:** புருண்டி, உபுன்ரு, உளசமூக பயிற்சி, மீள்இணக்கப்பாடு.



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**சிறுவர்களின் தேவையா? அல்லது சிறுவர்களின் உரிமையா? உளசமூக திட்டங்களை நடாத்துவதற்கு சிறுவர் உரிமை சாசனத்தை ஒரு சட்டவரைபாக பயன்படுத்தக் கோரிக்கை**

மிகவும் சிக்கலான அவசரகால நிலைமைகளில் (ஆயுத முரண்பாடு, கட்டாய குடியல்வு மற்றும் இயற்கை அனர்த்தங்கள்) நடைபெறும் உளசமூக இடையீடுகள் நடாத்தப்பட்ட நிலைமைகள், மிகவும் தாக்கமான சிறுவர் உரிமை மீறல்களை கொண்டிருக்கின்றன. இடையீடுகள் அனேகமாக தேவை அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அத்தோடு சிறுவர்களின் மனித உரிமைகள், எண்ணக்கருவிற்கான சட்டவரைபில் உள்ளிணைக்கப்படுவதில்லை. இந்தப்பிரசுரமானது சட்டரீதியானதும் நியமரீதியானதுமான சிறுவர் உரிமை சாசனத்தின் கடப்பாடுகளை விபரிப்பதோடு உரிமைரீயினான திட்டமிடல் செயல்முறைகள் பற்றியும் விபரிக்கின்றது. ஊசுஊயின் கொள்கைகளுக்கேற்ப திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மற்றும் மதிப்பிடல் நடைபெறுமாயின் உளசமூக இடையீடுகள் சிறுவர்களின் தேவைகளையும் உரிமைகளையும் மேலும் சிறப்பாக அடையும் என ஆலோசனை கூறப்படுகின்றது.

**முக்கிய சொற்கள்:** சிறுவர் உரிமைகள், மதிப்பீடு



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.